DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No.59 of 2025**
**LW-4 Examined as PW-2**

| | |
|---|---|
| Name:நாகமணி | Age: |
| Father Name: நாகராஜன்<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Gr.III Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 07.07.2026 | |

**07.07.2026**

எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம் 03.05 PM**

**அ.சா.2. – முதல் விசாரணை**

நான் கண்டிகையில் உள்ள தனியார் கம்பெனியில் டிரைவராக வேலை செய்துவருகிறேன். இவ்வழக்கு சம்பவ விபத்தில் இறந்துபோன வீரமுத்து எனது மைத்துவர் ஆவார். கடந்த 06.12.2022 ம் தேதி எனது மைத்துர் வீரமுத்துவும், கோகுலகிஷ்ணனும் இருசக்கர வாகனத்தில் மெய்யூரில் இருந்து காவூருக்கு சென்றுக்கொண்டு இருந்தபோது எதிர்புறமம் வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று தகவல் அறிந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு எனது மைத்துனர் வீரமுத்துவிற்கு தலையில் பின்பக்கம் காயம் ஏற்பட்டு இருந்தது. மேல் சிகிச்சைக்காக சென்னை மியாட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் மறுநாள் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்ததாக சொல்லும் தேதியில் நான் நிறுவனத்தில் பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவ விபத்து குறித்து நேரடியாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் எனது மைத்துனர் என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் அங்கு வந்து விசாரணை செய்தார்கள். அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன். விபத்தில் இறந்த நபர் என்னு மைத்துனர் என்ற காரணத்தினால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 3.10 PM**

**Sd/R. கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**